# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2399/34 - 2024 අගෝස්තු මස 28 වැනි බදාදා - 2024.08.28

*2399/34 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 99 ஆவது உறுப்புரையின் (13) (ஆ) ஆம் உப உறுப்புரையின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்**

இலக்கம் 21 - இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்திற்காக 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட **திருமதி தலதா அத்துகோரல** அவர்கள் கேட்டு விலகியமையின் காரணமாக ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளமையினாலும் ;

அரசியலமைப்பின் 99 (13) (ஆ) ஆம் உப உறுப்புரையின் கீழான ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த வெற்றிடத்தை நிரப்புமாறு அந்த பாராளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(1) ஆவது பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளமையினாலும்;

தெரிவத்தாட்சி அலுவலர் அரசியலமைப்பின் 99 (13) (ஆ) ஆம் உப உறுப்புரைக்கமைய மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (2) ஆவது உறுப்புரையின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக **திரு. கருணாரத்ன பரணவிதானகே** என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப்படுத்தி, மேற்கூறப்பட்ட சட்டத்தின் முதலாம் அட்டவணையில் "க" எனும் படிவத்திற்கமைய தேர்தல் ஆணைக்குழுவுக்கு விபரத்திரட்டை சமர்ப்பித்துள்ளமையினாலும்;


1A - G 42593 — 369 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1981* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் *64(2)* ஆவது பிரிவினால் தேர்தல் ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து மேற்கூறப்பட்ட **திருமதி தலதா அத்துகோரல** அவர்கள் கேட்டு விலகியமையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலக்கம் *21* - இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்துக்கான ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக **திரு. கருணாரத்ன பரணவிதானகே** என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
*2024*, ஓகத்து *28*.

EOG *08-0331*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.